11th March 1958]

1,762 applications under the Agricultural Loans and Land Improvement Loans Acts were rejected during the year for various reasons, like want of adequate security, lack of bona fides, withdrawals, etc. Under Rural Housing, 593 applications were rejected for the following reasons :—

Some applicants possessed houses only in Natham porombokes which remain unsubdivided and could not furnish collateral security. In come cases, the applicants did not possess site for construction of houses.

(*e*) The rules governing the grant of loans under Community Development/National Extension Service schemes are being examined with a view to liberalise them to the extent feasible, so that the poorer classes can also benefit.

Sri A. VEDARATHNAM : வீடு கட்டும் திட்டத்தில் 337 விண்ணப்பங்கள் வந்திருந்தும், அவைகளில் ஒன்று கூட அங்கீகரிக்கப்பட்டு, சாங்ஷன் செய்யப்படவில்லையென்பது ஏன் என்பதை தயவு செய்து மந்திரி அவர்கள் தெரிவிப்பாரா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : I am sorry Sir, I don't have the reasons. The hon. Member wants to have the reasons, he may ask for them in a separate question.

Elagiri and Javadi Hills

* 274 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of villages in the Elagiri hills and Javadi hills in the North Arcot district;

(*b*) the population of those villages; and

(*c*) the names of the tribes living there?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) One village in Elagiri and 46 villages in Javadi hills;

(*b*) One thousand nine hundred and sixty in Elagiri and 23,130 in Javadi hills; and

(*c*) Kavakkattu Vellans in Elagiri and Malayalis in Javadi hills.

Sri V. K. KOTHANDARAMAN : ஹரிஜன க்ஷேமநல நிதியிலிருந்து மலை ஜாதியினருக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : முதல் கேள்வியில் எண்ணிக்கையைத்தான் கனம் அங்கத்தினர் கேட்டிருக்கிறார். அதற்குமேல் சொல்ல வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுவதற்கு சௌகரியமாக இருக்கும்.

Sri A. A. RASHEED : Sir, is it a fact that the Central Government have given a grant for laying up roads to Elagiri? If so, what is the present stage of the laying of the roads?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I do not have the information with me now.

[11th March 1958

SRI V. K. KOTHANDARAMAN : மலை மீது பழத் தோட்டங்களும் காப்பித் தோட்டங்களும் இருக்கின்றன. அந்த மலை மீது போவதற்கு பாதைகள் அமைப்பது மூலமாக மேலும் அந்தத் தோட்டக் காடுகளை அபிவிருத்தி செய்ய முடியும் ? ஆகையால், சர்க்கார் அதற்கான ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி சில வகுப்பினர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்பதைப் பற்றியது. இதை வைத்துக்கொண்டு அந்தப் பகுதியிலே செய்யக்கூடிய எல்லா அபிவிருத்தி வேலைகளைப் பற்றியும் கேள்வி கேட்டால் என்னால் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது.

Trench rollers

* 275 Q.—SRI K. ANBAZHAGAN (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the total number of trench rollers with the Highways department;

(b) when they have been purchased and at what prices; and

(c) the number of days each roller has worked?

THE HON. SRI P. KAKKAN : (a) Four.

(b) July 1952 at Rs. 31,000 each.

(c) —

Roller number ..	**26–001**	**26–003**	**26–004**	**26–005**
Number of days worked.	**76**	**52**	**171½**	**3**

SRI A. GOVINDASAMY : ஏராளமான தொகை போட்டு வாங்கிய இந்த ரோலர்கள் குறைந்த நாட்களுக்கு வேலை செய்திருக்கின்றன. இப்பொழுது அவைகள் வேலை செய்கின்றனவா அல்லது உடைந்திருக்கின்றனவா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு நாட்கள் அவைகள் வேலைக்குத் தேவையாக இருக்கின்றனவோ அவ்வளவு நாட்களுக்கு வேலை செய்கின்றன.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இந்த ரோலர்கள் வேறு திட்டங்களுக்காக கொடுத்து அதன் மூலமாக அந்த இலாகா மூலமாக ஏதாவது பிரயோஜனப்பட்டு வருகிறதா?

THE HON. SRI P. KAKKAN : இதர மாகாணங்களுக்கோ அல்லது சர்க்காரின் இதர இலாகாவின் வேலைகளுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ அவைகள் கொடுக்கப்படுவதில்லை. ஹைவேஸ் கண்டிராக்டர்களுக்கு மட்டும் ஹைவேஸ் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

SRI A. GOVINDASAMY : 1952-ம் ஆண்டில் வாங்கிய ரோலர்களில் ஒன்று 76 நாட்களுக்குத்தான் வேலை செய்ததாகச் சொல்கிறார்கள். சுமார் இரண்டரை மாதங்கள் வேலை செய்திருக்கின்றன. பாக்கி நாட்களுக்கு அந்த ரோலருக்கு வேலையே இல்லையா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.